தலைப்பு 102 - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 102 - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைசசிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டு கணக்காய்வு தொடர்பில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டில் ஆறு செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட தொகை மொத்த பாதீட்டு ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பபடாமல் ரூபா 101 மில்லியன் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	எதிர்பார்க்கப்பட்டவாறு அந்த செலவியங்கள் செலவு செய்யாமையால் அந்த செலவின விடயங்களிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான பாதீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	திட்டமிட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு 19 செலவின தலைப்புகளிற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 140 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 112 மில்லியன்	அந்த செலவின தலைப்பகளிலுள்ள சேமிப்புகள் எதிர்பார்க்கப்பட்டவாறு முகாமைத்துவம் இன்மையால் செலவினங்களை செய்யப்படாமல் இருந்தன.	-மேற்படி-

	தேறிய ஒதுக்கீடு இருக்கின்ற தொகையுடன் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இது அந்த செலவின தலைப்புகளிற்கான மொத்த தேறிய ஒதுக்கீட்டில் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.		
(இ)	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்காத 102-1-1-1408 ஆம் இலக்க பாதீட்டு விடயத்திற்காக நி.பி 66 மூலம் ரூபா 17 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.	குத்தகை முறைமை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சருடைய அலுவலகம் தொடர்புபட்ட செலவிளங்களை செய்தமையால் ஏற்பாட்டில் தோவைப்பட்ட தொகை நி.பி 66 மூலம் 102-01-02-1408 ஆம் இலக்க செலவின தலைப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது.	-மேற்படி-
(ஈ)	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிற்கு மேலதிகமாக 2 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 200,000 ஒதுக்கப்பட்டது. ரூபா 3 மில்லியன் உரிய செலவின விடயங்களின் பாதிடப்பட்ட ஏற்பாட்டில் 1,500 சதவீதம் மற்றும் 1,610 சதவீதம் குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ஏற்பாடுகளை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஒரு செலவின விடயத்தின் தேறிய ஒதுக்கீட்டின் 29 சதவீதம் மொத்த தேறிய ஏற்பாட்டின் 100 சதவீதம் உள்ளடங்கலாக 1.5 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ஏனைய செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்தது.	நிதி அமைச்சர் மற்றும் நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தேசிய கொள்கை அமைச்சு செயலாளர் அலுலக கருத்தரங்கு மேசை, நிழற்பட பிரதி இயந்திரம் மற்றும் குளிரூட்டி போன்ற உபகரணஙகளை வழங்குவதற்கு வேண்டுகை செய்யப்பட்டவாறு இந்த நோக்கத்திற்காக மேலதிக ஏற்பாடு வேண்டப்பட்டதுடன் சனாதிபதி தேர்தலின் பின்னர் அராங்க மாற்றம் காரணமாக ஒதுகீடு திருப்பட்டிருந்தது. ஏனென்றால் சில உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-

3.2 அமைச்சின் செலவினத் தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சிதிட்ட மற்றும் ஏனைய அரசாங்க முகவர்களால் மூலதன செலவினங்களிற்காக ஒதுக்கபபட்ட நிதிப் பயன்பாடுகளின் முன்னேற்றம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அமைச்சின் பெயரிலுள்ள நிலைபேறான அபிவிருத்தி சபைகள், அரச தனியார் பங்குடைமை தேசிய முகவராண்மை, அரச உடமையாக்கப்பட்ட வியாபார மீள்கட்டமைப்பு பிரிவு மற்றும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என்பவற்றின் பாதீட்டு தலைப்பின் கீழ் 09 நிகழ்ச்சித் திட்டங்களின் செலவினங்களிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூபா 48 மில்லியனில் ரூபா 47 மில்லியன் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அந்த செலவின தலைப்பின் தேறிய ஒதுக்கீட்டின் 58 - 100 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க வீதத்தில் எடுத்திருந்ததுடன் 07 செலவின விடயங்கின் மொத்த தேறிய ஒதுககீடு 100 சதவீதம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவினைக் குறைப்பதற்கு ஆண்டின் போது திட்டமிடப்பட்டவாறு ஏனைய வளங்களிலிருந்து நிதி மற்றும் நிதியல்லாத பெறுவனவுகள் ஊழியரை சேர்ப்பதற்கு இயலாமை, எதிர்பார்க்கப்பட்ட செலவு ஏற்படாமை மற்றும் முறையான செலவின கட்டுப்பாட்டு அளவீடுகள காரணமாக இந்த ஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	வினைத்திறனான திட்டமிடல் மற்றும் வினைத்திறனான பயன்பாட்டிற்காக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காத அரச உடமையாக்கப்பட்ட மீள்கட்டமைப்பு பிரிவு, சமூக பாதுகாப்ப செயற்திட்டம் மற்றும் நித்துறை ஸ்திரத்தன்மை மற்றும் மீளமைப்பு நிகழ்ச்சிதிட்டம் (ADB) என்ற பெயருடைய செயற் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் 4 செலவினத் தலைப்பகளிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக மொத்தம் ரூபா 956 மில்லியன்	ஏற்பாடுகளிற்காக செயற்திட்டங்கள், நிகழ்ச்சி திட்டம் மற்றும் பிரிவுகளின் 4 செயற்திட்டங்களிற்காக வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காததுடன் குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக மொத்தம் ரூபா 956 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் உலக வங்கி சமூக பாதுகாப்பு செயற் திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்காக ஐ.அ.டொலர் 1.4 மில்லியன் ஒதுக்கியிருந்ததுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களம் ரூபா 430 மில்லியனை	நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

வழங்கப்பட்டிருந்தது. சமூக பாதுகாப்பு செயற்திட்டத்தின் ஒரு செலவின தலைப்பிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மொத்தம் ரூபா 430 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தேறிய ஏற்பாட்டின் 87 சதவீதமாக இருந்த ரூபா 375 மில்லியன் திருப்பி அனுப்பபட்டிருந்தது.	ஒதுக்கயிருந்தது. இந்த மீதி 2024 ஆம் ஆண்டில் இரண்டு தேர்தல் அறிவிப்பு காரணமாக செலுத்தப் படாதிருந்ததுடன் ஆண்டின் போது கொள்வனவு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககுடன் இணங்கமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள.

கணக்காய்வு அவதானிப்புக்கள்

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்களின் 1647(உ) ஆம் பிரிவு மற்றும் 2024 திசெம்பர் 18 ஆந் திகதிய 05/2024 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை.		அமைச்சிற்கு சொந்தமான சகல வாகனங்களின் விபரங்களும் கொண்டிருக்கின்ற முறையான வாகனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிர உள்ளடங்கலாக முறையான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணம் மற்றும் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றிக்கையால் வழங்கப்பட்ட அரசுடமை யாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி.		(i) வருடாந்த அறிக்கை மூன்று மொழிகளிலும் தயார்க்கப்பட்டு உரிய ஆண்டு முடிவடைந்து 5 மாதங்களிற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 முதல் 2023 வரையான ஆண்டுகளிற்கான அமைச்சின் கீழான 18 அரச முயற்சிகளின் வருடாந்த அறிக்கை 01-26 மாதங்கள்	2021.11.16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக அறிக்கை தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அமைச்சு காலத்திற்கு காலம் கடிதங்கள் மூலம் தொழல்முயற்சிகளிற்கு அறிவிக்கப்பட்ட பொதிலும் வருடாந்த அறிக்கைகள் தாமதத்துடன்	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையை செயற்படுத்த வேண்டும்.

			தாமதத்துடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாட்டின் கோவிட்நோய் தொற்று காரணமாக உரிய திகதியில் 2021 மற்றும் 2022 வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தற்கு சாத்தியமற்றிருந்தது. .தொடர்புபட்ட நிறுவனங்கள் உரிய திகதியில் அமைச்சிற்கு 2022 மற்றும் 2023 இற்கான வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு கடிதம் மூலம் அறிவிக்க்பபட்டிரந்தது.	
			(ii) அமைச்சின் கீழான 12 அரச முயற்சிகளிற்கான 2021 முதல் 2023 வரையான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தற்காக 2024 திசெம்பர் 31 அளவில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	2025 பெப்ரவரி 21 இல் திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை.	7,750 மில்லியன்	(i) திறைசேரி குறிப்பு தாள் SA-11 இன் பிரகாரம் அறிக்கையிடல் முகவரின் (நிதி அமைச்சு) சார்பில் ஏனைய முகவர்களால் ஏற்பட்ட செலவினம் ரூபா 69,784 மில்லியனாக இருந்தது. அதேநேரம் முற்பண சீராக்கல் கூற்றில் ரூபா 62,034 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது ரூபா 7,750 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	2024 மே மாதத்திற்காக 102-1-2-40-1501-33 ஆம் இலக்க பாதீட்டு தலைப்பின் கீழ் பல செலவின விடயங்களில் ரூபா 7,748 மில்லியனும் 2024 மார்ச் மாதத்திற்காக வரி மேன் முறையீட்டு ஆணைக்குழு ரூபா 1.5 மில்லியனும் அந்த மாதங்களில் CIGAS கணக்கு கூற்றுக்கள் ஊடாக திறைசேரி அச்சிடல் தாளில் உள்ளடக்கப்பட்டிருந்த து. எனவே, நாட்குறிப்பு பதிவு சமரப்பிப்பதன் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்தால் திறைசேரி அச்சிடல் தாளில் பதியப்பட்டது. இது SA 11 அரச	அரச கணக்குகள் வழிகாட்டல் இல. 06/2024 இன் பிரகாரம் பின்பற்றப்ட வேண்டும்.

		கணக்குகள் திணைக்களம் மூலம் திறைசேரி அச்சிடல் தாளில சேர்க்கப்பட்டிருந்த அமைசின் தலைப்பின் ஊடாக ஏற்பட்ட செலவினமாக உள்ளடக்கப்பட்டது. சொல்லப்பட்ட செலவினம் அமைச்சின் சார்பின் இன்னொரு திணைக்களத்தின் சார்பில் SA 11 இல் பதியப்பட்ட போதிலும் முற்பண கணக்கு மூலம் இந்த அமைச்சால் பெறப்பட்ட செலவினம் விடயமாக உள்ளது. இது முற்பண சீராக்கல் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.	
7,750 மில்லியன்	(i) திறைசேரி குறிப்பு தாள் SA-11 இன் பிரகாரம் அறிக்கையிடல் முகவரின் (நிதி அமைச்சு) சார்பில் ஏனைய முகவர்களால் ஏற்பட்ட செலவினம் நிதிக்கூற்றுடக் சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்று ACA-2(ii) இன் பிரகாரம் நி.பி 208 இன் கீழ் செலவினத்திற்கு சமமாக்க வேண்டும். எவ்வாறாயினும், முறையே ரூபா 69,784 மில்லியன் மற்றும் ரூபா 62,034 மில்லியனாக காட்டப்படுகின்றன. வித்தியாசம் ரூபா 7,750 மில்லியன் அவதானிக்கப்பட்டது.	மேற்குறிப்பிட்ட தாளில் குறிப்பிடப்படடவாறு இந்த தவறு ஏற்பட்டிருந்தது.	-மேற்படி-
ரூபா 246,896	(i) திறைசேரி குறிப்பு SA-51 இன் பிரகாரம் ஏனைய தலைப்புகளில் முற்பண "பீ" கணக்கிற்கு செய்யப்பட்ட பதிவு ரூபா 1.8 மில்லியன் உள்ளன. ஆனால், முற்பண	2024 மார்ச் மாதத்திற்காக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் அரச அலுவல்களிற்கு வழங்கப்பட்ட 246,896 கோடிகள் CIGAS	-மேற்படி-

	சீராக்கல் கூற்றின் பிரகாரம் ரூபா 1.5 மில்லியனாக இருந்தது. வித்தியாசம் ரூபா 246,896 ஆவதானிக்கப்பட்டது.	கணக்கு கூற்று ஊடாக திறைசேரி அச்சிடல் தாளில் உள்ளடக்கப்பட்டது. எனவே, அரச கணக்குகள் திணைக்களம் திறைசேரி தாளில் உள்ளடக்கப்பட்டிருந்தது இந்த அமைச்சின் முற்பணத்தில் ஏற்பட்ட செலவினம் SA 51இல் உளளடக்கப்பட்டது. அரச கணக்குகள் திணைக்களம் திறைசேரி தாளில் உள்ளடக்கப்பட்டது. ஆனால், இந்த அமைச்சால் பெறப்பட்ட முற்பணம் மூலம் உண்மையாக ஏற்பட்ட செலவினமாக உள்ளமையால் முற்பண சீராக்கல் கணக்கிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

3.4 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
நிதிப் பிரமாணத்தின் 571(2) மற்றும் (3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல மேலதிக வைப்புகளும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். ஆனால், திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 2-5 ஆண்டுகளிற்கு இடையில் ரூபா 36 மில்லியன் மேலதிக வைப்புக்களை மற்றும் ரூபா 22 மில்லியன் 5 ஆண்டுகளிற்கு மேலாக கையாளப்பட்டிருக்கவில்லை.	அந்த வைப்புகள் நிதி அமைச்சின் செயற்பாடுகளை செயற்படுத்தகின்ற ஒப்பந்தகாரர்களின் பிடிகாசாக உள்ளன. இந்த பிடிகாசு தொகை கோரப்பட்டிருக்காததுடன் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டதுடன் இந்த பிடி காசு தொடர்பில் அவசிமான நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களிற்கு அறிவிக்கப்பட்டது.	நி.பி. 571(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 குறித்த மட்ட இலக்கினை அடையத் தவறியமை

(அ) அரச உடமையாக்கப்பட்ட முற்சிகளின் மீள்கட்டமைப்பு

அரச உடமையாக்கப்பட்ட முற்சிகளின் மீள்கட்டமைப்பு தொடர்பில் நிதி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் அரச உடமையாக்கப்பட்ட முற்சிகளின் மீள்கட்டமைப்பு பிரிவு தாபிக்கப்பட்டிருந்தது ஏனென்றால் 2022 திசெம்பர் 01 இலிருந்து அதன் செயற்பாடுகளை தொடங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் சீர்திருத்த கொள்கை 02, பொதுக் கம்பனியின் தாபிப்பு, அமைச்சரவையால் அனுமதித்த 2023 மே 15 ஆந் திகதிய MF/036/CM/2023/107 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2023 மே 08 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 4.2 மற்றும் 4.3 ஆம் பந்திகளின் இணைப்பு 02 மற்றும் 3 இன் பிரகாரம் 72 நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டது. மீள்கட்டமைப்பிற்காக கம்பனி கட்டுப்படுத்துகின்ற துணைநிலை கம்பனியாக கம்பனிகளை மாற்றுவதற்கு தீர்மானித்த போதிலும் மீள்கட்டமைப்பிற்காக கம்பனியின் கட்டுப்படுத்தல் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.	பொதுக் கம்பனியின் வடிவமைத்தல் சொல்லப்பட்ட அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்க வெண்டிய ஏற்பாடுகள் பிரகாரம் பொது முயற்சிகளின் முகாமைத்துவத்தில் புதிய அதிகாரச்சட்டத்தின் அறிமுகப்படுத்தலின் பின்னர் செய்யப்பட முடியும். ஆனால், முன்னைய அரசாங்கத்தின் மாற்றத்தின் பொது அதிகாரச்சட்டம் அனுமதிக்கப் பட்டிருக்காமையால் பொதுக் கம்பனிகளின் வடிவமைப்பு சாத்தியமற்றிருந்தது.	அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளின் சீர்திருத்த கொள்கையில் குறிப்பிடப்பட்டவாறு செயற்பட வேண்டும் அல்லது அவற்றின் முறையான திருத்தங்களில் முறையாக கொண்டு வருவதற்கும் இதன்படி செயற்படவும் வேண்டும்.
(ii)	கட்டுப்படுத்துகின்ற கம்பனியின் மூலம் கையேற்கப்பட வேண்டுமென பரிந்துரைத்த விஞ்ஞாபனத்தின் இணைப்பு 01 பட்டியலின் பிரகாரம் 08	அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் மீள்கட்டமைப்பு பிரிவு 2024 ஆகஸ்ட் மாதமளவில் இறுதிக் கட்டத்தில் இருந்த 08 இனங்காணப்பட்ட	-மேற்படி-

	கம்பனிகள் கட்டுப்படுத்துகின்ற கம்பனியின் (Divesting) மூலம் கையேற்கப்படாமல் மீள்கட்டமைப்பு நடைமுறையின் கீழ் செயற்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களின் ஆதரவின் கீழ் அந்த கம்பனிகளிற்காக கேள்வி கோரல் நடைமுறைக்குள் பதியப்பட்டிருந்தது. இதன்படி 2023 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட 08 நிறுவனங்களில் 07 இற்காக கொடுக்கல் வாங்கல் ஆலோசனையார் நியமனத்தை அமைச்சரவை அங்கீகரித்திருந்தது. கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாராக ஒப்பந்தம் வழங்கப்பட்ட இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களிற்கு 18/62P ஆம் இலக்க அமைச்சின் பொது வைப்புக் கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 193 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது.	நிறுவனங்களின் மீள்கட்டமைப்பை கையேற்றிருந்தது. ஆனால் புதிய அரசாங்கம் அந்த செயற்திட்டங்களை மீண்டும் கருத்திற் கொண்டுள்ளதுடன் முன்னைய செயற்திட்ட்களிற்கு இடையில் :கிரான்ட் கையிட" கொட்டலில் நடந்த கலந்துரையாடலில் மூள்கட்டமைபை தொடருவதற்கு அனுமதித்திருந்தது.	
(iii)	இதன் முதன்மை நோக்கம் நட்டத்தை ஏற்படுத்தம் திறமையற்ற நிறுவனங்களை திறமையாகவும் ஆக்கபூர்வமாக நடாத்துவதாக இருந்த போதிலும் இது முதலாவது கட்டத்தில் கைதவிர்ப்பு நடைமுறைக்காக தெரிவு செய்யப்பட்ட 08 நிறுவகங்களில் 04 நிறுவனங்கள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது வரிக்கு முன்னரான இலாபத்தை உழைத்திருந்தது என கணக்காய்வு செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நிறுவனங்களிற்கு திறைசேரியிலிருந்து நிதிப் பங்களிப்பு எதுவும் செய்யப்	அரசாங்கத்தின் நிலவுகின்ற பொருளாதார கொள்கை பிரகாரம் 08 நிறுவனங்கள் மீள்கட்டமைப்பிற்காக இனங் காணப்பட்டிருந்ததுடன் மீள் கட்டமைப்பு தீர்மானத்தை பாதிக்கும் காரணியாக அந்த இலாப அல்லது இலாபத் தன்மையற்றது எனபதை நான் சுட்டிக்காட்டுகின்றேன்.	இதன் முதன்மை நோக்கம் நட்டத்தை ஏற்படுத்தம் திறமையற்ற நிறுவனங்களை திறமையாகவும் ஆக்கபூர்வமாக நடாத்துவதாக உள்ளது என அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவாறு அந்த அதிகரிப்பு மீள் கட்டமைப்பில் கருத்திற் கொள்ள வேண்டியதுடன் இல்லாதுவிடின் மீள்கட்டமைப்பு நடவடிகக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தப் ஏனைய துறைகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	பட்டிருக்காததுடன் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய MF/052/CM/2022/177 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 4(i) ஆம் பந்தியின் பிரகாரம் அந்த நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு தொடர்பான சாத்தியவளக் கற்கையில் கொண்டிருந்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(iv)	2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளிற்றாக அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு பிரிவு செயற்படுவதற்கு ரூபா 121 மில்லியன் செலவழித்திருந்தது. மொத்த நிர்வாக செலவின் ரூபா 58 மில்லியன் அல்லது 48 சதவீதத்தில் சம்பளப்பிரிவிற்கு செலவழிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அரச உடமையாக்கபபட்ட முயற்சிகள் மீள்கட்டமைப்பு பிரிவு (SOE) 2025 பெப்ரவரி மாாத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. இதன்படி 2024 திசெம்பர் 31 அளவில் இந்த பிரிவு எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கு சாத்திய மற்றிருந்ததுடன் கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளர் மற்றும் செயற்பாட்டிற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமான இருக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது.	கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	நட்டத்தை ஏற்படுத்தம் திறமையற்ற நிறுவனங்களை திறமையாகவும் ஆக்கபூர்வமாக நடாத்துவது நிறுவனத்தின் ஆரம்ப நோக்கமாக கொண்டு தாபிக்கப்பட்ட இந்த பிரிவின் செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு படிப்படியாக செயற்பட வேண்டும்.

(ஆ). அரச தனியார் பங்குபற்றலிற்கான தேசிய முகவராண்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
2022 செப்தெம்பர் 13 ஆந் திகதிய அனுமதிக்கப்பட்ட MF/051/CM/2022/176 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சேவையை தவினைத்திறனுடன் வழங்குவதற்கும் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அரச தனியார் பங்குபற்றலை அறிமுக்கபடுத்தம் நோக்கத்துடன் முகவராண்மை அரச தனியார் பங்குபற்றலுடன் தாபிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 அளவில் இந்த முகவராண்மை 2023 இல் குறிப்பிடப்பட்ட 12 செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக இந்த முறைமையின் கீழ் 14 செயற்திட்டங்கள் அமுலாக்கப் படுகின்றதுடன் 2024 செப்தெம்பர் 30 இல் இன்னொரு 72 செயற்திட்டங்கள் இந்த முறைமையின் கீழ் அமுலாக்குவதற்காக பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியளிவில் முகவராண்மை தாபிக்கப்பட்திலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்தது. ஆனால், அரச தனியார் பங்குபறறல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டிருக்காததால் இந்த முறைமையின் கீழ் தற்போது செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு தொடங்கப்பட்டிரந்ததுடன் குறித்த கால அட்டவணைப் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்டவாறு தொடங்கப்பட பரிந்துரைக்கப்பட்டவை தொடங்கப்படாமலும் பூர்த்தியாக்க வேண்டியவை பூர்த்தியாக்காமலும் இருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்	சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை வேண்டி அனுப்பிய கடிதத்தின் பிரதி, 'Guidelines on Government Tender Procedure - Part II' மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 02/2019 ஆம் இலக்கம் என்பன அரச தனியார் பங்குபற்றல் செயற்திட்டங்களிற்காக பயன் படுத்தப்படும். இதுவரை அரச தனியார் பங்குபற்றல் நிகழ்ச்சிச் திட்டதின் சட்ட கட்டமைப்பு அனுமதிக்கப்பட்டதுடன் அரச தனியார் பங்குபற்றலிற்ாக பெறப்பட்ட அரச தனியார் பங்குபற்றல் அதிகாரச் சட்டம் தொடர்பில் முன்னாள் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட கொள்கையை தொடருவதற்கு நியமிக்கப்பட்டது. உலக வங்கி பிரதிநிதிகள் மற்றும் நிதி அமைைச்சின் உத்தியோகத்தர்களிற்கும் இடையில் கலந்துரையாடல் முன்னேற்றத்தை விவாதிப்பதற்கு உலக வங்கி பிரதிநிதிகள் மற்றும் நிதி அமைைச்சின் உத்தியோகத் தர்களிற்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. பிஸ்கால் முகாமைத்துவ அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து அரச தனியார்	விலைப் பட்டியல் அனுமதித்தல் அல்லது முறையான நடவடிக்கை எடுத்தல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிரகாரம் 2025 பெப்ரவரி 25 வரை இந்த பிரிவின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதன்படி 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக செயற்படுகின்ற இந்த பிரிவிற்காக ஏற்பட்ட ரூபா 31 மில்லியன் செலவினம் பயனற்ற செலவினமாக இருக்ககூடுமென அவதானிக்கப்பட்டது.	பங்குபற்றல் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு வேண்டப்பட்டதுடன் வரைவு அரச தனியார் பங்குபற்றல் அதிகாரச் சட்டம் அபிவிருத்தி பங்குதாரருடன் மேலும் விவாதிப்பதற்காக வேண்டப்பட்டது.

4.2 உள்நாட்டு நிதிகளில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வாண்டில் உள்நாட்டு நிதிகளில் அமுலாக்கப்பட்ட திறைசேரி உள்ளக முகாமைத்துவம் மற்றும தகவல் முறைமை செயற்திட்டம் தொடர்பில் 02 பாதீட்டு விடயங்களின் கீழ் ரூபா 588 மில்லியன் மோத்த தேறிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 541 மில்லியன் பயன்படுத்தப்படாது இருந்தது. இது அந்த செலவின விடயங்களின் தேறிய ஏற்பாடுகளில் 47 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க வீச்சில் இருந்தது.	2024 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீட்டில் முறைமை செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு தேவைப்பட்ட மேலதிக பாவணையாளர் அனுமதி பத்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 420 மில்லியன் மதிப்பிடப்பட்டது ஆனால் தொர்புபட்ட ஒப்பந்தகாரருடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் விளைவால் மேற்குறித்த பாவணையாளர் அனுமதிப்பத்திரம்மேலதிக கொடுப்பனவு இல்லாமல் பெறப்பட முடியும். மதிப்பிடப்பட்ட செலவினத் தொகை அரச கணக்குகள் திணைக்களம் ஒப்பந்தகாரரின் ஈடுபாடில்லாமல் அவர்களால் முறைமை விரிவாக்கம் செய்ய முடியுமென அவசியமற்றதாக இருந்தது.	பாதீடுகள் தயாரிப்பதற்கு முன்னர் இருக்கின்ற சுற்றாடல் நிலையின் முறையான கற்கை மற்றும் உரிய தரப்பினருடன் முறையான உடன்படிக்கை செய்யப்பட வேண்டும்

4.3 கொள்வனவுகள்

(அ) 2024 பெப்ரவரி 24 இலிருந்து 2025 பெப்ரவரி 19 வரையான ஒரு ஆண்டு காலத்திற்காக சுகாதார சேவைகளிற்கான கொள்வனவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 பெப்ரவரி 20 இலிருந்து 2025 பெப்ரவரி 19 வரையான ஒரு வருட காலத்திற்காக ஒரு ஆண்டிற்கு ரூபா 35 மில்லியன் தொகைக்காக (வரி தவிர) சுகாதர சேவையை வழங்கிய முனனைய தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அமைச்சானது நாளாந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகளிற்காக குறிப்பிடப்பட்ட ஊழியர் எண்ணிக்கை இன்மையால் ஒப்பந்தத்தை இரத்து செய்திருந்ததுடன் நிலுவை எதுவும் இல்லையனெ குறிப்பிடப்பட்டமையால் ரூபா 1.7 மில்லியன் பிணைமுறியை விடுவித்திருந்தது. இரண்டாவது தடவை தெரிவுசெய்யப்பட்ட தனியார் கம்பனியும் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஊழியர் எண்ணிக்கை வழங்குவதற்கு தவறியிருந்தது. கொள்வனவு வழிகாட்டல் கைநூல் (2006) இன் 3:12:2 (11) ஆம் பிரிவின் பிரகாரம் முன் தகைமை பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருப்பின் தவறினை திருத்துவதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு தவறியமையால் அத்தகைய நிலைகளை எழுந்திருந்தது என அவதானிக்கபபட்டது. மேற்குறித்த இரண்டு சந்தர்பங்களிலும் அமைச்சு இந்த வேலைக்காக கேள்வி அழைப்பதற்காக புதினப் பதிதிரிகைகளில் விளம்பரங்களை	சுத்திகரிப்பு சேவைகளிற்காக கேள்விகள் கோரப்படும்போது 04 நிறுவனங்கள் கேள்வி ஆவணங்களை சமர்ப்பித்திருந்தது. கூலிச் சபை கட்டளையின் பிரகாரம் 4 கேள்வியாளர்கள் ரூபா 600 செலுத்தவும் வேலை மேற்பார்வைக்காக ரூபா 700 கேள்வி ஆவணங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சம்பளத்தின்படி இந்த சேவைக்கா 60 வயதிற்கு கீழுள்ள நபர்களை வேலைக்கமர்த்துவது கடினமாக உள்ளது என அவதானிக்கப்பட்டது. அந்த இடங்களில் இருக்கின்ற நிலையையினால் இரண்டு தரப்பினருடனான கலந்துரையாடலின் பின்னர் புரிந்து கொண்டனர். ஒப்பந்த காலப்பகுதியின் போது அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் மற்றும் அமைச்சின் வளவிலள்ள சொத்துக்களில் சேதம் ஏற்படவில்லை எனவும் கருதி செயலாற்றல் பிணைமுறி தொழிலின் தன்மையை கொண்டு விடுவிக்கப்பட்டது. சுத்திகரிப்பு சேவையை வழங்குகின்ற தனியார் கம்பனி ஊழியர் வருகை பல சந்தர்ப்பங்களில் ஆகக்குறைந்த மட்டத்தில் உள்ளதெனவும் 2025.04.25 இற்கு முன்னரான உடன்படிக்கை பிரகாரம் சுத்திகரிப்பு ஊழியரிக் வருகையை பேணுவதற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டதெனவும் அறிவித்திருந்தது.	தரமான சேவையை வழங்:குவதற்கு ஆக்க்குறைந்த எண்ணிக்கையான ஊழியர்கள் ஈடுபடுத்துவதையும் கொள்வனவு வழிகாட்டலை பின்பற்றுவதை உறதிப்படுத்துவதற்கும் தொடர்புபட்ட கம்பனிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வெண்டும்.

வெளியிடுவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 341,897 ஐ செலவழித்திருந்தது.

(ஆ) **இரண்டு திறைசேரி கட்டிடங்களில் பொருத்தப்பட்ட மின்னியல் நுழைவுக்க கட்டுப்பாட்டு முறைமை மற்றும் தொடர்புபட்ட உபகரணங்களின் பராமரிப்பு**

இரண்டு திறைசேரி கட்டிடங்களில் பொருத்தப்பட்ட மின்னியல் நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமை (Electronic Access Control System) ரூபா 17 மில்லியன் செலவில் தனியார் கம்பனி மூலம் பொருத்தப்பட்டிருந்ததுடன் இந்த முறைமை 2017 திசெம்பர் 19 இல் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 03 ஆண்டுகள் உத்தரவாதக் காலப்பகுதி 2020 திசெம்பர் 18 இல் முடிவடைந்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் ஆவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 3.5(இ) ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது வேலைகளின் கொள்வனவு வழங்குகையில அவசர தேவைச் சந்தர்பங்களில் மாத்திரம் நேரடி முறையில் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மேற்குறித்த முறைமையின் பராமரிப்பிற்காக மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ரூபா 4.3 மில்லியன் (வரியல்லாமல்) தொகை செலுத்தப்பட்டதுடன் அடுத்த 4 ஆண்டுகளின் பின்னர் அதன் உபபாகங்களின் உத்தரவாத காலப்பகுதி காலாவதியாகும் இதன்ப எவ்வித நம்பக தன்மையும் இல்லாமல் அடுத்த 4 ஆண்டுகளிற்காக கேள்விகள் கோரப்படாமல் மேறடகுறித்த கம்பனியால் சேவைகள் வழங்கப்பட்டடிருந்தது..	இரண்டு தறைசேரி கட்டிடங்களில் பொருத்தப்பட்ட மின்னியல் நுவிவு கட்டுப்பாட்டு முறைமை 2017.12.19 இல. அதன் பொருத்திய திகதியிலிருந்து 03 ஆண்டு உத்தரவாத காலப்பகுதிக்காக தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர். 2021 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 3.5(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் நேரடி ஒப்பந்தம் வழங்கல் முறையில் கீழ் எடுக்கப்பட்ட கொள்வனவு தீர்மானத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தனியாவ் நிறுவனத்தால் சேவைகள தொடரப்பட்டிருந்தது. ஆதலால், அதே நிறுவனத்தால் பராமரிப்பு வெலைகள் செய்யப் படுகின்றதற்கான காரணம் இந்த நிறுவத்தால் உருவாக்கப்பட்ட மின்னியல் நுழைவு கட்டுப்பாட்டு முறைமை, மென்பொருள், இரகசிய குறியீடு மற்றும் தரவு முறைமை மற்றும் ஏனைய தரப்பினருக்கு	அந்த கொள்வனவு வழிகாட்டலை பின்பற்றப்பட வேண்டும்.

		தரவினை வெளிப்படுத்தல் என்பவற்றின் பேணல் காரணமாக ஏற்படக்கூடிய பாதக நிலையை தடுப்பதற்காக இருந்தது.	
(ii)	தொடக்கத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை அச்சிட்ப்பட்ட மொத்த அட்டைகளின் எண்ணிக்கை மீதான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2024 மார்ச் மாதத்தல் 50 அட்டைகளிற்காகவும் 2023 இல் இரண்டு சந்தர்ப்பங்கில் 300 அட்டைகளிற்காகவும் மொத்தம் ரூபா 1.3 மில்லியன் (VAT மற்றும் சேவைக் கட்டணம் தவிர) செலுத்தப்பட்டது ஆதலால் அமைச்சானது ஒரு அட்டைக்காக ரூபா 3,334 முதல் ரூபா 4,462 வரை செலவழித்திருந்தது. அதேநேரம் அட்டை அச்சிடலிற்காக ஏற்பட்ட செலவினத்தை கருத்திற் கொண்டு நியாயமான உறுதப்படுத்தலை பெறுவதற்கு அத்தகைய முறைமையை பயன்படுத்திய ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அட்டடை அச்சிடல் செலவுகள் பற்றி ஒப்பீடு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை.	தயவுசெய்து எதிர்காலத்தில் இதனை எனக்கு தெரியப்படுத்வும். அதேநேரம் கொள்வனவு செய்யப்படுகின்ற அட்டைகள் அந்த விலைகள் கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஏனை அரசாங்க நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்யப்படும்.	செலவினங்கள் ஏற்பட்டது அல்லது செலவினங்கள் நியாயமாக இருந்ததென உறுதிப்படுத்து வதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முயற்சி எடுக்கப்பட வேண்டும்

4.4 முகாமைத்துவ நலிவுகள்

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தலைப்பு – 102 இன் நிகழ்ச்சிதிட்டம் I செயற்திட்டம் 5 இன் கீழ் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 105 மில்லியன் மொத்த தேறிய	வரிமேன் முறயீட்டு ஆணைக்குழு 2011 மே மாதத்தில் தாபிக்கப்பட்டதுடன் 2012 மார்ச் மாதத்திலிருந்த மேன் முறையீட்டு விசாரணைகளை தொடங்கியிருந்தது. ஆணைக்குழு தாபிப்பதற்கு முன்னரான மேன்	தீர்மானத்தின் பிரகாரம் வரி மேன்முறையீட்டை நிறைவேற்றுவதற்கும் நிலுவை வரிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும்.

ஒதுக்கீடுகளில் ரூபா 98 மில்லியன் செலவழிக்கப்பட்டிரந்தது. 2025 சனவரி 31 இல் உள்ளவாறு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் 506 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தது ஆனால் தீர்வு காணக்கட்டிரக்கவில்லை மற்றும் உரிய வரி பெறுமதி ரூபா 110,395 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 70,494 மில்லியன் மொத்தமான 29 மேன் முறையீடுகள் ரூபா ஒரு பில்லியனை விஞ்சியிருந்ததுடன் ரூபா 33,096 மில்லியன் மெத்தமான 107 மேன் முறையீடுகள் ரூபா 100 மில்லியனிற்கும் ரூபா 1000 மில்லியனிற்கும் இடையில் இரந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 3,408 மில்லியன் வரிப் பெறுமதியுடன் 27 மேன் முறையீடுகள் இருந்தன. ஆனால், விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்காததுடன் ரூபா 106,990 மில்லயன் பெறுமதியான 483 மேன்முறையீடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் தீர்ப்பு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டிலிருந்து 2025 சனவரி 28 வரை மேன் முறையீட்டு விசாரணைகள் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் இறுதி தீர்ப்புக்காகவுள்ள ‘Reserved Cases’ 233 வழக்குகள் உள்ளதுடன் வரிப்பெறுமதி ரூபா 36,514 மில்லியனாக இருந்தது. ஆதலால், ஆணைககுழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வரி மேன்முறயீட்டு தீர்வு நடைமுறையின் இறுதி கட்டம் நீண்ட காலமாக பூர்த்தியாக்கப்படாததினால் தாக்கத்திற்கு உள்ளாகும் என அவதானிக்ப்பட்டது. அரசாங்கத்தால் சேகரிக்கப்பட வேண்டிய வருமான சேகரிப்பில் குறிப்பிடத்தக்களவு தாதம் முறையீட்டு நடைமுறையின் கீழ் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மீளாய்வு சபையிலிருந்து (Board of Review) பெறப்பட்ட 71 வழக்குகள் விசாரணைகளுடாக இந்த ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டம் மூன்று மொழிகளிலும் வழங்குவதற்காக 2013 இல் திருத்தப்பட்டது. 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூன்று தீர்ப்பகங்களை பராமரிக்க வழிவகுத்தலும் 2019 வரை ஆணைக்குழு ஒரு மொழியிலே செயற்படுகின்றது. அதே காலப்பகுதியின் பொது 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரையான மூன்று ஆண்டுகளின் இறுதியில் புதிய உறுப்பினர்களை நியமிக்காமையால் மேன் முறையீட்டு நடைமுறை தொடரப்பட்டிருக்கவில்லை.

உள்ளதுடன் இதன் விளைவால் அரசாங்கம் தேவையற்ற நேரடி மற்றும் மறைமுக கிரயங்களிற்கு உள்ளாகும்.		

5. மனிதவள முகாமைத்துவம்

அனுமதிக்கப்பட்ட பதவீயணி மற்றும் உள்ளபடியான பதவியணி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் 403 அனுமதிக்கப்பட்ட பதவிகள் இருந்தன அதில் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 104 பதவிகள் அல்லது 26 சதவீதம் வெற்றிடமாக இருந்தன. அவற்றிற்கிடையில் 20 சிரேஸ்ட மட்ட பதவிகள், 01 மூன்றாம் மட்ட பதவிகள் மற்றும் 48 இரண்டாம் நிலைப் பதவிகள் வெற்றிடமாக உள்ளமையால் திணைக்களத்தின் செயற்பாட்டினை நேரடியாக பாதிக்கும்	வருடாந் இடமாற்றத்தின் கீழான நியமனங்கள், வருடாந்த இடமாற்றமின்னை பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் செய்யப்பட்டனதுடன் புதிய ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒப்பந்த அடிப்படையில் அமைச்சு சபையால் செய்யப்பட்ட நியமனங்கள் மற்றும் உரிய நியமன அதிகாரங்கள் நியமனங்கள் என்பன இருக்கின்ற வெற்றிடங்கள் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2025.01.08 மற்றும் 2025.02.13 ஆந் திகதிய உத்தியோகத்தர் நியமன கடிதங்கள் மூலம் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 359 இற்கு குறைக்கப்பட்டது.	வெற்றிடங்கள் நிரப்பும் நடைமுறையை செயற்படுத்தப்பட வேண்டும்.